**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண்.42/2020**

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ஆக வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1873ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் படி இளநிலை உதவியாளர் திருமதி. இம்மாராணி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருணாச்சலம் | தொழில்: | --- |
| த/பெ: | சுப்ரமணி | ஜாதி: | --- |
| முகவரி: | 2/320. காந்தி நகர், சடையம்பாளையம்,<br>சாமியம்பாளையம் அஞ்சல்,<br>தட்டாங்குட்டை பஞ்சாயத்து | சமயம்: | இந்து |
| தாலுக்கா: | குமாரபாளையம் | வயது: | 62 |
| மாவட்டம்: | நாமக்கல் | | |

**07.03.2022**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இவ்வழக்கில் 3ம் நபர் ஆவேன். எனக்கு இவ்வழக்கின் விபரங்கள் குறித்து நேரடியாக தெரியும். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தயார் செய்தார். ஆகவே சமூகம் நீதிமன்றம் அவர்கள், எனது சாட்சியத்தை ஏற்று வாதி தாவாவில் கோரியபடி தீர்ப்பு தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.